1970 செப்டம்பர் 1]

மாண்புமிகு திரு. செ. மாதவன் : டிரம்ஸ் உற்பத்தி செய்யக் கூடிய தொழிற்சாலையை பொறுத்த அளவுக்கு மெட்ரூஸ் ரிபைனரி என்ற ஒரு பெரிய தொழிற்சாலையைச் சுற்றி, சிறு, சிறு தொழில்கள் வளரவேண்டும். சிறு தொழில் அதிபர்களுக்கு இந்தத் தொழிலைக் கொடுக்கவேண்டும் என்று நாம் வற்புறுத்திக்கொண்டு வந்தோம். ஆனால், நம் வேண்டுகோளை மறுத்து, மத்திய அரசு ஐ.ஓ.ஸிக்கு, இண்டியன் ஆயில் கார்ப்பரேஷனுக்கு, கிட்டத்தட்ட ரூ. 28 லட்சம் வரை செலவில், 10 லட்சம் பாரெல்ஸ். 5 லட்சம் டிரம்ஸ் ஒரு ஆண்டுக்கு உற்பத்தி செய்யக்கூடிய ஒரு அனுமதியை வழங்கியிருக் கிறார்கள். எப்படியாவது நம்முடைய தமிழ் நாட்டிற்கு அந்தத் தொழிற்சாலை வந்ததே என்பதில் மகிழ்ச்சி.

* 177 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether any collaboration has been entered into with Messrs Cadbury by Government for the manufacture of Chocolates in the State; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 178, 179, 180, 181 ஆகிய எண்ணுள்ள கேள்விகள் ஒற்றிவைக்கப்படுகின்றன.

விராச்சிலையில் குடிநீர் ஊருணி

* 182 வினா—புலவர் பொ. பொன்னம்பலம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா : (அ) திருமயம் தொகுதியிலுள்ள, விராச்சிலையில் அமைந்திருக்கும் குடிநீர் ஊருணிக்கு வரும் வாரியில் நீண்ட அளவு பெருங்குழாய் அமைத்துக் கொடுக்க அரசு முற் படுமா ?

(இ) ஆமெனில், எப்பொழுது நடைமுறைக்கு வரும்?

மாண்புமிகு திரு. மா. முத்துச்சாமி: (அ) & (இ) திருமயம் ஊராட்சி ஒன்றியக் குழுவில் கிராம வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ. 8,000 (ரூபாய் எட்டாயிரம்) செலவில் விராச்சிலையில் அமைந் திருக்கும் குடிநீர் ஊருணிக்கு வரும் வாரியில் நீண்ட அளவு பெருங் குழாய் அமைக்கத் தீர்மானித்துள்ளது. மேற்படி வேலைக்கு ஊராட்சியின் பங்கான ரூ. 2,000-ஐ (திட்டத்தின் மொத்த செலவில் 25 சதவிகிதம்) ஊராட்சி தனது நிதியிலிருந்தோ அல்லது பொது மக்களிடமிருந்தோ பணம் வசூலித்து செலுத்தியவுடன் வேலை துவக்கப்படும்.